Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

KAYALPATTNAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 12.11.2011

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 12.11.2011 | 89 | பொருள் எண்:-1.<br><br>காயல்பட்டணம் நகராட்சியில் மக்கள் தொகை 40542 (2011-ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) ஆகும் . தற்போது இந்நகருக்கு தாமிரபரணியாற்றினை குடிநீர் ஆதாரமாகக் கொண்டு காயல்பட்டணம் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல் படுத்தப்பட்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் ஆத்தூர் நீரேற்று நிலையத்திலிருந்து தினமும் 23 இலட்சம் லிட்டர் குடிநீர் பெறப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 57 லிட்டர் வீதம் 4 நாட்களுக்கு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதனை தினசரி விநியோகிக்கவும், அனைத்து பகுதிகளுக்கும் முறையாக தொடர்ந்து விநியோகம் செய்ய ஏதுவாகவும், அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நீர் ஆதாரத்தினை பெருக்கவும் வேண்டியுள்ளது. எனவே காயல்பட்டணம் நகராட்சிக்கு புதிதாக குடிநீர் திட்டத்தினை செயல்படுத்த நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மூலம் M/s, வேப்காஸ் லிமிடெட்,சென்னை என்ற நிறுவனத்தாரை கலந்தாலோசகராக நியமனம் செய்து வரிவான திட்ட மதிப்பீடு ரூ.2967/- இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது .<br><br>மேற்படி புதிய காயல்பட்டணம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2967/- இலட்சத்திற்கு **SLSC (State Level Sanctioning Committee)** குழுவினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் குடிநீர் திட்டதிற்காக விரிவான திட்ட மதிப்பீடு ரூ.2967/- இலட்சத்தில் 80 சதவீத தொகையான ரூ. 2373.60 இலட்சத்தை மத்திய அரசின் மானியமாக பெறவும் 10 சதவீத தொகையான ரூ. 296.70 இலட்சத்தை மாநில அரசின் மானியமாக பெறவும் மேலும் மீதமுள்ள 10 சதவீத தொகையான ரூ.296.70 இலட்சத்தை இந்நகராட்சி பங்குத் தொகையாக நகராட்சி பொது | அலுவலக குறிப்பு வரிசை எண் 1 மற்றும் 2 ஆகியன ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது<br><br>வரிசை எண் 3-ல் நகராட்சியில் பொறியாளர்களும் அலுவலர்களும் பற்றாக்குறையாக இருப்பதால் இத்திட்டத்தை திறம்பட செயல்படுத்த அதிகபடியான சிறப்பு பொறியாளர்களையும் அலுவலர்களையும் நியமித்து இத்திட்டத்தை அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது (மன்றத்தின் மூலம்) |

Please purchase PDFcamp Printer on http://www.verypdf.com/ to remove this watermark.

| | | | |
|---|---|---|---|
| | | நிதியிலிருந்து செலுத்தவும் மேற்படி திட்டத்தினை நகராட்சி மூலம் செயல் படுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:-<br><br>1) திருத்திய விரிவான திட்ட மதிப்பீடு ரூ.2967/- இலட்த்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம். இதற்கு மத்திய மாநில அரசு மானியமாக முறையே 2373.60 இலட்சம் மற்றும் 296.70 இலட்சம் பெறலாம்.<br><br>2) நகராட்சி பங்குத் தொகையான ரூ.296.70 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>3) மேற்படி குடிநீர் திட்டத்தினை நகராட்சி மூலம் செயல் படுத்தவும் மன்ற அனுமதி வழங்கலாம். | |